புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# தேவதச்சனின் மர்ம நபர் உணர்த்தும் மாய உணர்ச்சியும் பண்பாடும் (Illusion)

திரு. வீ.பூமிநாதன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்-635601.

## முன்னுரை

பண்பாடு என்பது மனிதர்களின் நடத்தை தொடர்புடையதாக அமைவதால், ஒவ்வொரு மனிதனின் செயல்பாடுகளும் பண்பாட்டு வளர்ச்சி, பண்பாட்டு மாற்றம், சிதைவு ஆகியவற்றில் பங்காற்றுகிறது. தனிமனித செயல்பாடுகள் அவரவர் மனம் சாரந்து அமைவதால் பண்பாடுகளில் தனிமனிதனின் மனமும் முக்கிய பங்காற்றுகிறது. எனவே தேவதச்சனின் மர்ம நபர் என்ற கவிதைத் தொகுப்பில் மனதின் மாய உணர்ச்சியுடன் தொடர்புடைய கவிதைகள் பண்பாட்டில் எவ்வகை தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதை ஆராயும் பொருட்டு இவ்வாய்வு அமைகிறது.

## மாய உணர்ச்சி (Illusion)

மனிதர்களின் மனம் எவ்வித குழப்பம், மயக்கமும் அற்ற சூழலில் புலன்களால் ஏமாற்றப்படுவது மாய உணர்ச்சி அல்லது மாய தோற்றம் என அழைக்கப்படுகிறது. மேலும் மாய உணர்ச்சி என்பது 'ஒரு உண்மையான உணர்ச்சி தூண்டுதலின் தவறான பிரதிநிதித்துவம்' எனப்படுகிறது. பொதுவாக புறநிலை யதார்த்தத்திற்கு முரண்படும் ஒரு விளக்கமே மாய உணர்ச்சி எனலாம். மாயைகள் என்பது சிறப்பு புலனுணர்வு அனுபவங்களாகும், இதில் உண்மையான வெளிப்புற தூண்டுதல்களிலிருந்து எழும் தகவல், தூண்டுதல் வரும் பொருள் அல்லது நிகழ்வின் மாறான கருத்து அல்லது தவறான எண்ணத்திற்கு வழிவகுக்கிறது.

உதாரணமாக, இரவில் மரக்கிளைகளை பூதம் போல் உணரும் ஒரு குழந்தை மாய உணர்ச்சியை அடைவதாக கூறலாம். மேலும் ஒரு கடையின் ஜன்னலில் தங்களுடைய முகப்பு விளக்குகள் எதிரொலிப்பதைப் பார்க்கும் ஓட்டுநர், அங்கு சாலை இல்லை என்று தெரிந்தாலும், மற்றொரு வாகனம் தங்களை நோக்கி வருவது போன்ற மாயையை உணர்கிறார்.

இதேபோன்ற பொருண்மையில் தேவதச்சனின் கவிதைகள் சில காணப்படுகிறது. மேலும் அக்கவிதைகள் சமகால மக்களின் பண்பாட்டுகளை பிரதிபலிப்பதாகவும் விளங்குகிறது.

"கலவிக்கு
சற்று முன்பாக
தன் ஆடைகளை
நழுவ விடுகிறாள்
நல்லவேளை,
டமார் என்று
சத்தம் போடவில்லை அது
கரப்பான் பூச்சியைப் போல
சுவரோரம் ஓடவுமில்லை
நொறுங்கி
சில்லுசில்லாய்
தரையெங்கும் சிதறவில்லை
முக்கியமாய்

அதன் நிறங்கள்
ததும்பி
அங்கும் இங்கும்
சிந்தவில்லை..”1

உறக்கம் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள இக்கவிதையில் ஆடைகள் சத்தம் போடவில்லை, ஓடவில்லை, சிதறவில்லை, சிந்தவில்லை என்று யாதார்தத்திற்கு மாறான ஒன்றாக புனையப்பட்டுள்ளது. மேலும் இக்கவிதையில் நழுவும் ஆடையை பெண்களின் நிலையெனக்கொண்டு தன் சுயத்தினை வெளிப்டுத்த இயலாச் சூழலில் உள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

மாய உணர்ச்சிகளின் வகைகள்

மாய உணர்ச்சியானது புலன்களினால் ஏற்பாடும் சிதைவுகள் அல்லது மாற்றங்கள் என்பதால் இவை புலன்களின் செயல்பாடுகளோடு தொடர்புபடுத்தி பலவகைகளாக பிரிக்கின்றனர்.

1. தூண்டுதல்-சிதைவு மாய உணர்ச்சி
2. செவிவழி நிகழ்வுகளின் மாய உணர்ச்சி
3. ஒளியியல் மாய உணர்ச்சி
4. உணர்தல் - திரித்தல் மாய உணர்ச்சி
5. காட்சி புலனுணர்வு மாய உணர்ச்சி
6. உணர்வு மாய உணர்ச்சி
7. வண்ண மாய உணர்ச்சி
8. எடை மாய உணர்ச்சி
9. முகர்தல் (ஆல்ஃபாக்டரி) பாகுபாடு மாய உணர்ச்சி
10. தொட்டுணரக்கூடிய மாய உணர்ச்சி
11. இடையுணர்வு விளைவுகள்
12. மனநல முக்கியத்துவத்தின் மாய உணர்ச்சி

போன்ற வகைகளாக மாய உணர்ச்சியை உளவியளாளர்கள் பகுத்து விளக்குகிறார்கள்.

தூண்டுதல் - சிதைவு மாய உணர்ச்சி

தூண்டப்படும் ஆற்றல் மாற்றமடைந்தோ அல்லது சிதைந்தோ யதார்த்த காட்சிக்கு முரணான அல்லது மாறுபட்ட காட்சியை உணரச்செய்யும் நிலையினை தூண்டுதல்- சிதைவு மாய உணர்ச்சி என்கிறார்கள்.

“சாலையில்
ஒரு பைத்தியம் குனிந்து
ஒவ்வொன்றையும்
தொட்டபடி தொட்டபடி
போகிறான் முழு
பூமியும் உடன் மிருதுவாகிறது.
அவன்
தன் விரல்களால் குனிந்து
தொட்டபடி
தொட்டபடி
நகர்கிறான்
வானுயர் கட்டடங்கள் நிறைந்த
சாலையெங்கும் ஒலிக்கிறது
புல்வெளியின் தாழ்ந்த இசை”[2]

தேவதச்சனின் இசை என்ற இக்கவிதையில் பைத்தியத்தின் தொடுதல் என்ற யதார்த்த தூண்டல் அதற்கு மாறான இசையாக மாற்றமடைந்து உணர்த்தப்படுகிறது. மேலும் இச்சமூகத்தின் வன்மையான செயல்களினால் மனிதர்களின் மனம் சிதைவுக்கு உட்பட்டு

பைத்தியமாக மாறுகிறது. பைத்திய நிலையில் மனம் மனிதத்திற்கான சமூகத்தினை தொட்டு தொட்டு மாற்ற எத்தனிக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

செவிவழி நிகழ்வுகளின் மாய உணர்ச்சி

செவிவழியில் நிகழும் செயலான கேட்டலில் ஏற்படும் மாயத்தினை இவ்வகையில் உணரலாம். இயற்கையாக ஏற்படும் சத்தம் ஒன்றாகவும் காதுகளில் கேட்டு உணரும் சத்தம் வேறொன்றாகவும் இவ்வகையில் உணர்கிறார்கள். இந்த விளைவினை இயற்பியலில் உள்ள டாப்ளர் விதியுடன் ஒப்பிட்டு பார்க்க இயலும்.

ஒரு திசையிலிருந்து வெளிப்படும் சத்தத்தினை வேறு திசையிலிந்து வருவதாகவும் உணர்ந்திருக்கிறார்கள். இவ்வகை சோதனையை 1928 ஆம் ஆண்டில் அமெரிக்க உளவியலாளர் பால் தாமஸ் யங் விவரித்தார், அவர் ஒரு சூடோஃபோனை (pseudophone) உருவாக்கினார், இது இரண்டு காது எக்காளங்களால் (ear trumpets) செய்யப்பட்ட ஒரு கருவியாகும், ஒன்று தலையின் வலது பக்கத்திலிருந்து இடது காதுக்கும் மற்றொன்று நேர்மாறாகவும் இருக்கும். இது ஒலியின் தலைகீழ் மாயையான தோற்றத்தை உருவாக்கியது. இந்த சூடோபோன் அணிந்து தெருவில் நடந்து செல்லும்போது, அவர்கள் உண்மையில் இடதுபுறத்தில் இருந்து வரும்போது வலதுபுறத்தில் காலடிச் சத்தம் கேட்கும். என்பதை பால் தாமஸ் கண்டறிந்தார்.

“ஒரு தடவைதான்
இல்லை
என்ற சொன்னாள்
பிச்சைக்காரன் காதில்
ஒன்பதாவது தடவையாக
விழுந்தது அந்தச் சொல்
அவன் முகத்தில்
கோபம் கனன்றது...”3

ஆலிலை என்ற இக்கவிதையில் ஒரு முறை கூறிய சொல் பல முறை கேட்பதான மாய உணர்சியினை ஏற்படுத்துகிறது. மேலும் இச்சமுகம் பெற்றிருக்கும் வறுமையும் இல்லாமையையும் உணர்த்த வல்லதாக இக்கவிதை அமைகிறது.

ஒளியியல் மாய உணர்ச்சி

ஒளியின் ஒளிவிலகல் (வளைவு) காற்றில் இருந்து தண்ணீருக்குள் செல்லும் போது ஒரு ஒளியியல் மாயையை ஏற்படுத்துகிறது: கண்ணாடி தண்ணீரில் உள்ள வைக்கோல் உடைந்து அல்லது நீரின் மேற்பரப்பில் வளைந்திருப்பதாக காட்சி அளிக்கிறது. மேலும் ஒரு சதுப்பு நிலத்தின் நீரில் ஒரு பகுதி மூழ்கிய மரத்தடி வளைந்திருப்பது போன்ற மாயையை அளிக்கிறது.

வண்ண மாய உணர்ச்சி

சூரிய ஒளியில் இருந்து இருண்ட அறைக்குள் ஒருவர் நுழையும்போது, முதலில் அந்த அறை முற்றிலும் இருட்டாகத் தெரிகிறது. பிரகாசத்தின் ஒரு பகுதி குறைவான தீவிரம் அல்லது அதிக தீவிரமான பின்புலத்தில் காணப்படும் போது ஒரே நேரத்தில் மாறுபாடு ஏற்படுகிறது. ஒரு சாம்பல் நிற பேட்ச் காகிதத்தை கருப்பு பின்னணியில் வைத்தால், அது முன்பு இருந்ததை விட வெண்மையாகத் தெரிகிறது; வெள்ளை பின்னணியில் வைத்தால், அது கருமையாக இருக்கும்.

“எதுவும் இப்பொது மான்கள் அல்ல.
யாரும் இப்போது மான்கள் அல்ல.
பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்கள்
மான்களின் தோலில்
...
மானின் பொன்னிறத் துளிகள் சதா
வீட்டில் சிந்திக்கொணட்டிருக்கும் என்று
அதன் பின்னால் செல்லத் தொடங்குகிறீர்கள்
அது வெகுதூரம் கூட்டிச் செல்கிறது,
வீட்டை விட்டு.....”4

இறப்பு என்னும் இக்கவிதையில் ஒன்றின் உழைப்பு அல்லது பயன் மானின் நிறமாக உணர்த்தப்படுகிறது. மானின் பொன்னிறத்துளிகள் பார்வையாளனுக்கு அழகுணர்ச்சியை ஏற்படுத்துமே தவிர மானிற்கு பயன் தருவதன்று, அதேபோல் ஒன்றின் உழைப்பும் அதற்கு பயன்தருவதாக அமைவதில்லை என்ற அவலத்தினை இக்கவிதையின் மூலம் உணர்த்துகிறார் கவிஞர் தேவதச்சன்.

*தொட்டுணரக்கூடிய மாய உணர்ச்சி*

தோலில் ஏராளமான "புள்ளிகள்" உள்ளன, அவை குளிர் அல்லது வெப்பத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவையாக பதிலளிக்கின்றன, ஆனால் பொதுவாக இரண்டிற்கும் இல்லை. எவ்வாறாயினும், மிகவும் சூடான தூண்டுதல் குளிர்ச்சிக்கு பதிலளிக்கும் இடத்தில் வைக்கப்படும்போது குளிர்ச்சியின் உணர்வை உருவாக்கும். இவ்வாறு, ஒரு சூடான தூண்டுதல் குளிர்ச்சியாக உணரப்படும் போது, மாயையானது முரண்பாடான குளிர் என்று அழைக்கப்படுகிறது.

வெந்நீரை ஒரு கையிலும், மறுபுறம் குளிர்ந்த நீரையும் தட்பவெப்பநிலைக்கு ஏற்ப நீண்ட நேரம் ஓடவிட்டு, இரு கைகளையும் வெதுவெதுப்பான நீரில் மூழ்கடித்தால், குளிர்ந்த கை சூடாகவும், சூடாகவும், குளிராகவும் இருக்கும். குளிர்ச்சியை தழுவிய கையை மூழ்கடிப்பதில், குளிர்ச்சியை உணரும் நரம்பு செல்கள் திடீரென தடுக்கப்பட்டு, வெப்பத்தை உணரும் நரம்பு செல்கள் திடீரென தூண்டப்பட்டு, வெப்பத்தை தழுவிய கையில் தலைகீழாக நடக்கிறது.

“குழந்தை நெளிந்துகொண்டிருக்கிறான். அம்மா
இன்னொரு கையில் தொலைபேசியில்
பேசியபடி இருக்கிறாள்.
தொலைபேசியையும் கீழே
வைக்க முடியவில்லை
குழந்தை நெளிந்தபடி
வழுக்கத் தொடங்குகிறான்.
ஒரு இலை
நெளிந்து
உதிரும்போது
முழு மரமும்
சாய்ந்து விடுகிறது”[5]

முழு மரம் என்ற தேவதச்சனின் இக்கவிதையில் தொடுதல் என்பதுதான் குழந்தைக்கும் தாயுக்கும் உள்ள பந்தம், ஆனால் அவள் தொலைபேசியுடன் நெறுக்கம் காட்டுகிறாள், மரத்திற்கு உள்ள அன்புகூட தாய்மை இழந்துவிட்டுள்ள நிலையினை இக்கவிதையின் வாயிலாக அறிய முடிகிது.

*மனநல முக்கியத்துவத்தின் மாய உணர்ச்சிகள்*

ஒரு குழந்தை இரவில் நிழலில் அச்சுறுத்தும் முகங்கள் அல்லது பேய்களை உணரும் போது அல்லது மரங்களில் பூதங்களைப் பார்க்கும் போது, பதட்டம் அல்லது பயம் போன்ற உணர்வுகள் வெளிப்புறப் பொருட்களில் வெளிப்படும் சமயங்களில் சூடோஹாலூசினேஷன்கள் எனப்படும் மாயைகள் ஏற்படுகின்றன. பயத்துடன் பதட்டமாக இருக்கும் ஒரு சிப்பாய் உயிரற்ற பொருட்களை தாக்கும் எதிரியாகவோ அல்லது தனது சொந்த தோழர்களில் ஒருவரை எதிரியாகவோ உணரலாம். இலக்கியத்தில் டான் குயிக்சோட் என்ற பாத்திரம் காற்றாலைகளை எதிரி மாவீரர்களாக உணர்ந்தார். மனநல நோயாளிகள் மக்களை இயந்திரங்களாகவும், கரடிகளாகவும், பிசாசுகளாகவும் உணர்ந்துள்ளனர்.

“என் தோட்டம் எங்கும்
ஏகப்பட்ட
ஒடிந்த செடிகள்
சாய்ந்த செடிகள்
ஒரு சிறு வண்ணத்துப்பூச்சி
அதை

*நிமிர்த்தி வைத்தபடி*
*நிமிர்த்தி வைத்தபடி*
*செல்கிறது*
*எனக்கு அதை*
*பின் தொடர வேண்டும் போல்*
*இருக்கிறது”6*

*பின்தொடரல் என்ற தேவதச்சனின் கவிதையில் செடிகளை, ஒடிந்தும் சாந்தும் உள்ள பாண்பாடாகவும் அதனைச் சரிசெய்யும் அன்பு மற்றும் நேர்மை, உண்மை, அறம் போன்ற கூறுகள் வண்ணத்துப்பூச்சியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.*

*முடிவுரை*

*சமுதாயத்தின் யதார்த்ததினை அதன் நேர் எதிரான யதார்த்தமாக அவன் உள்வாங்குகிறான். ஆகையால் சமூக ஒழுங்கமைப்புகள் சிதைவதுடன் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே தனிமனிதனின் மனம் சார்ந்த உளச்சிக்கல்களை சரியாயன உளவியல் வல்லுநர்களின் ஆலோசனை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்ற அறிவியல் அனுமுறையும், சமூதாயத்தில் ஏற்பட்டுள்ள பண்பாட்டுச் சிதைவுதான் மனிதனின் மனம் பிறழ்வதற்கு காரணமாக அமைகிறது, எனவே பண்பாட்டுச் சிதைவுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மனிதத்தையும் சமூகத்தினையும் ஒழுங்கமைக்க முடியும் என்பதை தேவதச்சனின் கவிதைகள் வழி உணரமுடிகிறது.*

*அடிக்குறிப்பு*

1. மர்ம நபர், தேவதச்சன், உயிர்மை பதிப்பகம், இரண்டாம் பதிப்பு *(2021), ப-81*
2. *மேலது, ப -135*
3. *மேலது, ப -68*
4. *மேலது, ப- 72*
5. *மேலது, ப – 97*
6. *மேலது, ப - 69*

********* ********* ********** ********* ********* ********** ********** **********